அழகன்குளம் இராமநாதபுரத்திலிருந்து கிழக்கே 17 கிலோ மீட்டர் தொலைவில் வைகை ஆற்றின் வடகரையில் கடற்கரையை ஒட்டி அமைந்துள்ளது. இக்கிராமம் கி.மு. 2 ஆம் நூற்றாண்டு முதல், கி.பி. 2 ஆம் நூற்றாண்டு வரையிலான காலக்கட்டத்தில் ரோமானியர்களுக்கு முக்கியத் துறைமுகமாக தமிழகத்தில் திகழ்ந்துள்ளது. இப்பகுதியில் வாணிபம் நடைபெற்றதற்கான சான்றுகள் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன.

1984 ஆம் ஆண்டு முதல் இதுவரை 24 அகழாய்வுக் குழிகளில் கிடைக்கப்பட்ட தொல்பொருட்களின்மூலம் பண்டைய மக்களின் சமூக, பண்பாட்டு செயல்பாடுகள் தெரியவந்துள்ளது. எனவே, அழகன்குளத்தில் விரிவான தொல்லியல் அகழாய்வுப் பணிகள் 55 இலட்சம் ரூபாய் மதிப்பில் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

(இ) சென்னை மாநகரில் கூடுதலாக 100 சிற்றுந்துகள் இயக்குதல் மற்றும் போக்குவரத்துக் கழகங்களில் கருணை அடிப்படையில் பணியிடங்கள் நிரப்புதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களை இணைப்பதிலும், பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதிலும், சாலைப் போக்குவரத்து முக்கியப் பங்கு வகிக்கிறது. போக்குவரத்து சேவையை, பொது மக்களுக்குக் குறிப்பாக, ஏழை, எளிய மக்களுக்கு அளித்துவரும் அரசு போக்குவரத்துக் கழகங்களை மேம்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.*

தமிழகத்தில் நாள்தோறும் 1.79 கோடி பயணிகள் 20,839 அரசுப் பேருந்துகளில் பயணம் செய்கின்றனர். டீசல் விலை உயர்வால் போக்குவரத்துக் கட்டணங்களை உயர்த்தும் நிலையைத் தவிர்க்கும் வகையில், போக்குவரத்துக் கழகங்களுக்கு எனது தலைமையிலான அரசு, 2012 ஆம் ஆண்டு முதல் டீசல் மானியம் வழங்கி வருகிறது. கடந்த 4 ஆண்டுகளில் 1,556 கோடியே 72 இலட்சம் ரூபாய் டீசல் மானியமாக போக்குவரத்துக் கழகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

போக்குவரத்துத் துறையின் சார்பில் புதிய அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் வெளியிடுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2016 செப்டம்பர் 1

1. சென்னை மாநகரில் தற்போது மாநகர் போக்குவரத்துக் கழகத்தால் 200 சிற்றுந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. போக்குவரத்து வசதிகள் இல்லாத இடங்களை அருகிலுள்ள போக்குவரத்து முனையங்களுடன் இந்தச் சிற்றுந்துகள் இணைக்கின்றன. சென்னை மாநகரில் கூடுதலாக 100 சிற்றுந்துகள் மாநகர் போக்குவரத்துக் கழகத்தால் இந்த ஆண்டு இயக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

2. அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பணியில் இருக்கும்போது இறந்துபோன பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்குப் பதிவு மூப்பின் அடிப்படையில் ஒரு போக்குவரத்துக் கழகத்தில் 200 பணியிடங்கள் என்ற வீதத்தில், 8 போக்குவரத்துக் கழகங்களில் 1,600 பணியிடங்கள் கருணை அடிப்படையில் நிரப்பப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஈ) பூந்தமல்லி மற்றும் திருப்பூர் (வடக்கு) வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் இலுப்பூர், ஆம்பூர் மற்றும் முசிறி போக்குவரத்துப் பகுதி அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓட்டுநர் உரிமம், புதிய வாகனம் பதிவு செய்தல், போக்குவரத்து வாகனத்திற்கான புதிய அனுமதிச் சீட்டு, அனுமதிச் சீட்டு புதுப்பித்தல், வரி நிலுவை இல்லாச் சான்று, மறுபதிவுக்கான அனுமதி, தடையில்லாச் சான்று மற்றும் பன்னாட்டு ஓட்டுநர் உரிமம் போன்ற பல்வேறு பணிகளுக்காக பொது மக்கள் போக்குவரத்து அலுவலகங்களுக்குச் செல்ல வேண்டியுள்ளது. எனவே, போக்குவரத்து அலுவலகங்களை நவீனமயமாக்குவதுடன், பல்வேறு சேவைகளும் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)*

போக்குவரத்துத் துறை சார்ந்த புதிய அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் வெளியிடுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

1. வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் போக்குவரத்து அலுவலகங்களில் தேவையான வசதிகள் இருப்பதில்லை. எனவே தான், கடந்த 5 ஆண்டுகளில் 4 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கும், 5 பகுதி அலுவலகங்களுக்கும் சொந்தக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. வாடகைக் கட்டடங்களில்